மாண்புமிகு திரு. எஸ். ஜே.. சாதிக் பாஷா : (அ) and (இ) மதுரை மருத்துவக் கல்லூரியில் குடிதண்ணீர் வசதிக்காக ஒரு ஆழமான துளைக் கிணறுகட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அது சம்பந்தமான வேலைகள் முடிவடைந்து அக்கல்லூரி விடுதிகளுக்கு 1967-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

Fishery Rentals

***130 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Panchayats which are at present given fishery rentals ?**

குளமகசூல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

தற்போது எத்தனை பஞ்சாயத்துக்களுக்குக் குளமகசூல் கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தகவல்கள் சேர்க்கப்படுகின்றன.

MR. CHAIRMAN : Questions are over.

II.—ANNOUNCEMENTS

(1) MESSAGE FROM THE GOVERNOR

MR. CHAIRMAN : I have received the following message, dated the 21st February 1968 from the Governor of Madras:—

'I have received with great satisfaction your resoultion of thanks for the Address with which I opened the present session of the Legislature'.

(2) NOMINATION OF A MEMBER TO BUSINESS ADVISORY COMMITTEE

MR. CHAIRMAN : I have to announce to the House that under rule 166 (4) of the Madras Legislative Council Rules, I have nominated Thiru K. Ramadass, M.L.C., as a Member of the Business Advisory Committee for the year 1967–68 in the vacancy casued by the resignation of the membership of Thiru R. Venkataraman.

III.—PRESENTATION OF THE BUDGET FOR 1968–69

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை, முறைப்படி, இம் மன்றத்தின் முன் வைக்கவேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். இவ் வரவு-செலவுத் திட்டத்தின்கண் இடம் பெற்றுள்ள வேலைத் திட்டங் களையும், அவற்றிற்கான நிதி ஒதுக்கங்களையும் குறித்து ஓரளவு விரிவாக விளக்கும் வகையில், இன்று காலை சட்டப் பேரவையில் நான் ஆற்றிய உரையின் படிகள்* மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, கூறியது கூறாமல், எனது இவ்வுரை யில் நமது மாநில நிதி நிலையின் பொதுவான சில போக்குகளையும், இவ் வரவு-செலவுத் திட்டத்தின் உட்கிடக்கையாகவுள்ள சில கோட்பாடு களையும் குறித்து, இம் மன்றத்தின் நாட்டத்தை ஈர்ப்பதே சாலும் என்று நினைக்கின்றேன்.

---

*Printed as Appendix II on pages 30–153

28th February 1968] [திரு. சி. என். அண்ணுதுரை]

2. நமது மாநில நிதி வசதிகளைச் செவ்வையாகப் பயன்படுத்துவதில் எப்போதுமே பெரும் முக்கியத்துவம் அளித்து வந்துள்ள இம் மாமன்றம் முதற்கண், நமது மாநிலத் திட்டத்திற்கு 85 கோடியே 28 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கியிருந்ததற்கு மாருக, நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், 88 கோடியே 10 இலட்சம் ரூபாயளவில் திட்டத்திற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளதென்பதைக் காணும்போது, மகிழ்ச்சி அடையும் என்று நம்புகிறேன். சிறுபாசனம், கிராம மின் வசதி ஏனைய மின்சாரத் திட்டங்கள், மீன்பிடிப் படகுகளை விசைப் படகுகளாக மாற்றும் திட்டம் போன்ற சில முக்கிய உற்பத்தித்துறைகளில், திட்ட வேலைகளை விரைந்து நிறைவேற்றி வருவதே, திட்டத்திற்குரிய மத்தியஉதவி உயர்த்தப்படாமலிருப்பினும், நாம்இந்த அளவிற்கு, திட்ட முதலீட்டினை உயர்த்துவதற்குப் பெரிதும் காரணமாக இருந்துள்ளது. தற்போதைய மதிப்பீடுகளின்படி, நாம அதிகப்பற்று ஏதும் இன்றியே அனுமதிக்கப்பட்ட வழிவகை முன்பணத் தொகையில்கூட இன்னும் 2 கோடி ரூபாய் பெறத்தக்க நிலையில் இப்பெரிய திட்டத்திற்கு நிதி வகை செய்ய இயலும். வளர்ச்சியின்பாற்படாத செலவினங்களையும் உற்பத்தியைப் பெருக்காத செலவினங்களையும் தவிர்ப்பதற்கு, நாம் இடைவிடாமல் கண்ணும் கருத்துமாக இருந்ததால்தான் இச்சாதனையைப் பெற முடிந்தது. திருத்தப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து, இப்போது எழும் நிலைமை, நடைமுறைக் கணக்கிலும், கடந்த ஜூன் திங்களில் நாம் எதிர்பார்த்த நிலைமையை விடக் குறிப்பாக வளர்ச்சி அடைந்துள்ளதையே காட்டுகிறது. 220 கோடி ரூபாய்க்குமேல் செல்லும் வரவு-செலவுத் திட்டமொன்றில், 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு உணவு தானிய விற்பனைமீது அளித்துள்ள உதவித் தொகைக்காக முற்றிலும் வகை செய்தபின்னரும், நடை முறைக் கணக்கில் துண்டு விழும் தொகை 45 இலட்சம் ரூபாய் மட்டுமே என்பதை எண்ணிப் பார்த்தோமானுல், அது நமக்குப் பெருங் கவலை எதனையும் உண்டாக்க வேண்டியதில்லை. நமது குறிக்கோள் அளவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போதும், நடப்பாண்டில் நாம் எய்தியுள்ள சாதனைகள், ஊக்கம் அளிக்கும் வகையிலே உள்ளன என்றே நாம் கருத வேண்டும். மிகு பயன் தரும் தானிய ரகத் திட்டப் பகுதிகளை மேலும் பரந்த அளவில் விரிவுபடுத்தியிருப்பதனுலும், ஏறக்குறைய 3 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றியிருப்பதனுலும், நடப்பாண்டில் கால நிலை சீர்கேடாக இருந்தும், ஏறக்குறைய 60 இலட்சம் டன் அளவிற்கு உணவு தானிய உற்பத்தியை நம்மால் பெருக்க முடிந்துள்ளது. என்றுமிராத அளவில் வறட்சி அளவில் நிலை நிலவியிருந்ததாகப் பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிற 1965-66-ம் ஆண்டைவிட, நடப்பு ஆண்டின் பருவநிலை குறிப்பிடத் தக்க அளவு நலம் பயப்பதாய் இல்லையென்பதை மீண்டும் ஈண்டுக் கூற விரும்புகின்றேன். 1965-66-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நடப்பாண்டில் உணவு தானிய உற்பத்தி 7 இலட்சம் டன் அளவிற்குப் பெருகியுள்ளது. நடப்பாண்டில், நமது திட்டத்தின் பகுதியாக நாம் நிறைவேற்றியுள்ள திட்ட வேலைகளின் பயனுகவே இவ்விளைச்சல் உயர்ந்துள்ளது என்பதை இயம்ப வேண்டியதில்லை.

3. இப்போது மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து உருவாகிற அடுத்த ஆண்டுத் திட்டம், 79 கோடியே 68 இலட்சம் ரூபாய் அளவில் மட்டுமே நிற்கிறது. இதிலிருந்து, விரைந்த நமது திட்டங்களின் வளர்ச்சியிலேயே சிறிது சுணக்கம் ஏற்பட்டுள்ளதோ என்று முதற்கண் தோற்றமளிக்கக் கூடும். எனவே, சில துறைகளில் வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவரங்களையொட்டி காணப்படும் குறைவு, வெளித் தோற்றமே தவிர, உண்மையானதல்ல என்பதை உடனடியாகக் கூற விரும்புகின்றேன். இந்திய அரசும், திட்ட ஆணைக் குழுவும், ரிசர்வ் வங்கியும் நமக்கு வழங்கியுள்ள அறிவுரைக் கிணங்க, நிறுவனங்களின் வாயிலாக, இதுகாறும் பெற்று வந்த கடன் வசதியைவிட அதிக அளவில் பெற, அரசு முடிவு செய்துள்ள காரணத்தால்தான், கிணறுகள் தோண்டுதல், எண்ணெய்ப் பொறிகளுக்கும் விசையேற்றங்களுக்கும் கடன்கள் வழங்குதல் போன்ற சில

திட்டங்களின் கீழ், வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் குறைந்துள்ளது. வேளாண்மை—அதற்குத் தொடர்பான துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக, வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் போன்ற, சிறப்பியல்பு கொண்ட சில நிறுவனங்களை இந்திய அரசு நிறுவியுள்ளது. மாநில அளவில் வேளாண்மைத் தொழிற் கழகம் என்கிற நிறுவனம் ஒன்றை, இந்திய அரசின் பங்கு மூலதன உறவுடன் நாம் நிறுவியுள்ளோம். இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம், வாணிப வங்கிகள் முதலிய நிறுவனங்கள், அடைமான வங்கிகளின் கடன் திட்டங்களில் அதிக பங்கு கொள்வதன் வாயிலாக, வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதில் மேன் மேலும் அக்கறை காட்டிவருகின்றன. திட்டத்திற்கு, மத்திய அரசு, வரவு-செலவுத் திட்டத்தின் வாயிலாக நேரடியாக வழங்கும் உதவிக்குப் புறம்பாக, நமக்குக் கிட்டுகிற இந்த நிதி வசதிகளை நாம் பெற்றுக்கொள்வதற்காக வகை செய்யப்பட்டுள்ள இப்புதிய வாய்ப்புகளை, கிணறுகள் தோண்டுதல், விசையேற்றங்களை நிறுவுதல், தவணைக்கொள்முதல் அடிப்படையில் டிராக்டர்களை . வழங்குதல்போன்ற மிக முதன்மையிடம் வழங்கப்பட்டுள்ள சில திட்டங்களை, பெருமளவில் விரைவுபடுத்துவதன்மூலம் முற்றிலும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. சட்டப் பேரவையில் நான் ஆற்றிய உரையின் விவரங்களிலிருந்து, இயல்பான இந்தத் திட்டங்களுக்கு மேல், பெரும் பாசனத் திட்டங்களிலிருந்து பாசன வசதி பெறும் பகுதிகளில் ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றுவது போன்ற சிறப்பான சில வளர்ச்சித் திட்டங்களையும் நாம் நிறைவேற்றக் கருதியுள்ளோம் என்பதும் புலனாகும். அத்தகைய பகுதிகளில், வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து கிடைக்கிற உதவியைக்கொண்டு, கிணறுகள் தோண்டுவதற்கும், இறைவைப் பாசனத்தை மேம்பாடு செய்வதற்குமான பெரியதொரு வேலைத் திட்டத்தைத் தீட்டி வருகிறோம். நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கும் திட்டத்தின் வாயிலாகக் கிட்டுகிற ஏனைய நன்மைகள் ஒருபுறமிருக்க, கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், பின்தங்கிய வகுப்பினர் நலன் போன்ற சமூகநலப் பணிகள் குறித்த வேலைத் திட்டங்களுக்கும் போதிய நிதிகளை ஒதுக்கும் வகையில் மாநில வரவு-செலவுத் திட்டத்திற்குத் துணை செய்கிறது. நிறுவனங்களின் மூலம் பெறுகின்ற கடன் வசதிகளுடன் வரவுசெலவுத் திட்டத்தின் வாயிலாக நேரடியாக வகை செய்யப்பட்டிருக்கும் நிதிகளையும் கூட்டிப் பார்த்தால், அடுத்த ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிற வேலைகள், நடப்பாண்டுப் பணிகளுக்கு நிகராக இருக்குமென்றும், அதனால் வளர்ச்சித் திட்ட வேலைகளை நிறைவேற்றும் விரைவு தணியாது பேணப்படும் என்றும் அறியலாம்.

4. நான்காம் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பது தள்ளிப் போடப்பட்டுள்ளது என்பதையும், 1969–70-லிருந்துதான் அது செயலாக்கப்படுமென்பதையும் இப் பேரவை நினைவில் கொள்ளவேண்டும். இச் சூழலில், 1968–69-ம் ஆண்டினை, ஓர் இடைநிலைக் காலமென்றும், அதற்குப் பின்வரும் ஆண்டுகளில் மேலும் விரைந்து முன்னேற்றம் காண்பதற்காக இப்போது நிறைவேற்றப்பட்டுவரும் பற்பலத் திட்டங்களின் பலன்களை ஒன்று திரட்டும் காலமேயென்றும் திட்ட ஆணைக்குழு கருதுகிறது. 1965–ம் ஆண்டிலிருந்து புதிய பெருந் திட்டங்களை எடுத்து நடத்த இயலாத வகையில், நமது நாட்டின் பொருளாதாரம் பெரும் இடர்ப்பாடுகளுக்கு உட்பட வேண்டியிருந்தது. மின்சாரம், தொழில்கள் போன்ற துறைகளில் புதிய பெருந் திட்டங்கள் இல்லாத காரணத்தினால்தான், 1966–67-லிருந்து, நமது மாநில அளவில் ஏறக்குறைய 80 கோடி ரூபாய் அளவிலும், நாடு முழுவதுமாக மத்திய, மாநிலத் திட்டங்கள் ஒருசேர ஏறக்குறைய 2,200 கோடி ரூபாய் அளவிலும், திட்ட முதலீடுகள் அப்படியே தேக்கமடைந்து விட்டன. உறுதியான அடிப்படையில் புதிய நான்காம் திட்டத்தை வகுக்கும்போதுதான், இத்தேக்க நிலையினின்றும் விடுபட்டு பெருமளவில் முன்னேற்றங் காண முடியும்.

5. அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டவாய்ப்புகளை நோக்குங்கால், வெளிச் சந்தைக் கடன்களையும் இந்திய அரசினர்க்குச் சேர வேண்

டிய கடன்களையும் திருப்பிச் செலுத்துவதில் நமக்குள்ள இடர்ப்பாடுகளைப்போல், நடைமுறைக் கணக்கிலே இடுக்கண் அவ்வளவாக இல்லையென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். உண்மையில், நமது நடைமுறைக் கணக்கில், 74 இலட்சம் ரூபாய் அளவிற்கு, சிறிய உபரி காணப்படுகிறது. மத்திய வரிகளில், குறிப்பாக வருமான வரியிலும், மத்திய ஆயத் தீர்வைகளிலும் நமக்குள்ள பங்கு, வழக்கமான அளவில் வளர்ச்சியடைந்திருந்தால், இந்த உபரி மேலும் சிறிதளவு உயர்ந்திருக்கக் கூடும். இந்தச் சூழலில்தான், வருமான வரியின் கீழ் வசூலிக்கப்படாமலுள்ள ஏராளமான நிலுவைத் தொகைகள், ஊக்கமுடன் திரட்டப்பட வேண்டுமென நான் ஆர்வமுடன் வேண்டியுள்ளேன். ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள வரிகளின்கீழ் சேர வேண்டிய பெருந்தொகைகள், ஏதோவொரு காரணத்தால் வசூலிக்கப்படாமல் நிலுவையாய் இருக்கும்போது, கூடுதல் வரிகளின் வடிவில், மக்களின் மீது புதிய சுமைகளைச் சுமத்துவதிலே நியாயமேதுமில்லையென்று நான் சொன்னால், இம் மாமன்றம் அதனை ஏற்குமென்று எண்ணுகிறேன். மத்திய வரித் தொகைகளில் நமக்குள்ள பங்கு வளர்ச்சியடையாதது ஒரு புறமிருக்க, நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய இந்திய அரசுக் கடன் தொகைகளின் அளவோ மிக உயர்ந்துள்ளது. குறுகிய காலக் கடன்களின் நிமித்தம் நமக்குள்ள பொறுப்புக்களை நீக்கிப் பார்த்தாலும், இத் தலைப்பின் கீழ் 7 கோடி ரூபாய் அளவில் இது உயர்ந்துள்ளது. அடுத்த ஆண்டில் திட்டத்திற்கான நிதி வசதிகளை அரிப்பதற்கான முக்கிய கூறுகளில் இதுவும் ஒன்றாகும். கடந்த காலத்தில் இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டித் தொகை, மத்திய வரிகளில் நமக்குள்ள பங்கின் 44 சத வீதத்தை விழுங்கி விடுகிறது ; திருப்பிச் செலுத்தப்படும் கடன் தொகைகள், ஏனைய திட்டங்களுக்காக இந்திய அரசு வழங்கும் புதிய கடன் உதவியில் 76 சத வீத அளவினைச் சரிக்கட்டிவிடுகிறது. மூன்றும் நிதி ஆணைக்குழுவும், நான்காம் நிதி ஆணைக்குழுவும், மாநில வரவு-செலவுத் திட்டங்களில், இக்கடன் பொறுப்புகள் மலையென உயர்ந்துள்ளன என்பதை ஒத்துக்கொண்டுள்ளன. ஆனால், இச் சிக்கல், அவற்றின் ஆய்வு வரம்பிற்கு அப்பால் வைக்கப்பட்டதால், இதற்குச் செவ்விய முறையில் தீர்வு காண இயலவில்லை. மாநில அரசுகள், தங்கள் கடன் பொறுப்புக்களைத் தீர்ப்பதில் நேரும் இடர்ப்பாடுகளை, ஒரு வகையில் இந்திய அரசு தனது அயல் நாட்டுக் கடன்களைத் தீர்ப்பதில் காணும் இடர்ப்பாடுகளுடன் ஒப்பிடலாம். தோழமை நாடுகளிடமிருந்தும், உலக வங்கி போன்ற கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொண்ட கடன்களைத் திரும்பிச் செலுத்தும் பொறுப்புக்கள் பெரிதும் வளர்ந்திருப்பதை இம் மாமன்றம் நன்கு அறியும். இவ்வுயர்வு, அயல் நாடுகளிடமிருந்து பெறும் புதிய உதவியைப் பெருமளவிற்குப் பயனற்றதாகிவிடுகிறதென்றும், அதனால் கடன் பொறுப்புகளைத் திருப்பிச் செலுத்தும் தவணைக் காலத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும், இந்திய அரசு சொல்லிவருவது சரியே. அத்தகைய கடன்கள், வட்டி வீதத்திலும் தவணைக்கால அளவிலும் அதிகச் சுமை தாராத "மென்மையான" நிபந்தனைகளில் வழங்கப்படவேண்டுமென்ற எண்ணம் பொருகி வருகின்றது. அது குறித்து, இந்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் ஓரளவிற்கு வெற்றியளித்திருப்பதாகவும் தோன்றுகிறது. வளர்ச்சித் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் குறித்தும், இதைப்போலவே ஈர உள்ளத்தோடு இணங்க வேண்டுமென்றுதான் நாங்கள் வேண்டுகின்றோம். இவ்வளர்ச்சித் திட்டங்களில் பெரும்பாலானவை, பயன்தரப் பலநாள் செல்லும். எடுத்துக்காட்டாக, இரண்டாம் திட்டக் காலத்தின் இறுதி நிலையிலேயே மேற்கொள்ளப்பட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், இன்னும் முடிவு பெறவில்லை. அவ்வாறிருந்தும், கடந்த சில ஆண்டுகளாக, இத்திட்டத்திற்கென வாங்கிய கடனில் ஒரு பகுதியை, ஏற்கெனவே நாம் திருப்பிச் செலுத்தவேண்டி இருக்கிறது. இதைப்போலவே, இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களை, மாநில அரசாங்கத்திற்கு நேரடியாக ஆதாயம் தராத, ஆனால் பொருளாதாரத்திற்கு மறைமுகமாய் ஆக்கம் அளிக்கும் திட்டங்களுக்குப் பயன்படுத்தியிருக்கிறோம். இத்தகைய திட்டங்களுக்கு முற்றிலும் மானியங்கள் வழங்கியோ, மென்மையான நிபந்தனைகளில் கடன்கள் வழங்

[illegible]யோ, நிதி உதவ வேண்டுமென்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர் நான்காம் நிதி ஆணைக் குழு, சரியாகச் சுட்டிக் காட்டியிருப்பதுபோல், "மாநிலங்களின் கடன் சிக்கல் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டிய தொன்றாகும்." அதில் பரிவும் அடங்கியிருக்க வேண்டும் என்பதே, என் வேண்டுகோளாகும்.

6. அடுத்த ஆண்டின் நிதி வசதிகளைக் கரைப்பதற்குக் காரணமான மற்றொரு முக்கியக் கூறு, கடந்த நவம்பர் திங்களில், நமது பணியாளர் கட்கு வழங்க ஒப்புக்கொண்ட கூடுதல் அகவிலைப்படியாகும். இதனால், ஒரு முழு ஆண்டில் 6 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவில், கூடுதல் சுமை ஏற்படும். நடப்பு ஆண்டில் நான்கு திங்கள்களுக்குரிய அகவிலைப்படி வீதங்கள், பணியாளர்களின் வருங்கால வைப்புநிதி கணக் குகளில் வரவு வைக்கப்பட வேண்டியிருப்பதால், அதையும் சேர்த்து அடுத்த ஆண்டு நடைமுறைக் கணக்கின்கீழ் 9 கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்தாகவேண்டும். மத்திய அரசு, தன் பணி யாளர்களின் அகவிலைப்படி வீதங்களை அடுத்தடுத்து உயர்த்துவதால், மாநில அரசுகளுக்கு ஏற்படும் சுமையை மத்திய அரசு பகிர்ந்துகொள் வதற்கான திட்டமெதுவும் இல்லாதிருப்பது மத்திய அரசிடமிருந்து மாநி லங்களுக்கு நிதி மாற்றம் குறித்த தற்போதைய ஏற்பாடுகளில் உள்ள பெரிய குறைபாடுகளில் ஒன்றாகும். இச்சிக்கலும் நான்காம் நிதி ஆணைக் குழுவின் நாட்டத்திற்கு வந்துள்ளது. ; என்றாலும், "அத்த கைய தேவைகளைக் கருத்திற்கொண்டு, தேவையான இடங்களில் எல்லாம், மத்திய அரசு உதவியளிப்பதற்கு இசைவாக தக்கதொரு நடை முறையை வகுக்க வேண்டியிருக்கும்" என்ற அளவில், தனது கருத் தினைத் தெரிவித்திருப்பதைத் தவிர, தனது ஆய்வு வரம்பின் குறுகிய வரையறை காரணமாக, திட்டவட்டமான பரிவுரைகள் எவற்றையும் அது செய்ய இயலவில்லை. நிதி ஆணைக் குழுவின் மிதமான, நியாயமான இக் கருத்துரையைத் தொடர்ந்து, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக் காதது வருந்தத் தக்கதாகும்.

7. எனவே, மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிலவவேண்டிய நிதித் தொடர்புகள் அனைத்தையும் அடக்கும் வகையிலே, ஆக்கம் நிறைந்த விரிவான ஆய்வு, நீண்ட நாட்களுக்கு முன்னரே செய்யப்பட் டிருத்தல் வேண்டும். நான்காம் நிதி ஆணைக் குழுவின் தலைவர், தமது துணைக் குறிப்பில் சுட்டிக்காட்டியிருப்பதுபோல், "ஒரு நாட்டின் மத்திய, மாநில அரசுகள் தங்கள் தங்கள் வரம்புகளுக்குள் தனித்தும், ஒன்றுக்கொன்று தாழாமலும், தங்களுக்குள் இணக்கமாகவும் இருக்கவேண்டும் என்பதே கூட்டாட்சி முறையின் இலக்கணமாகும். இப்போது, இக் கோட்பாடு நடைமுறையில் செயல்பட வேண்டுமென்றால், மத்திய, மாநில அரசுகள், தத்தம் அலுவல்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான நிதி வசதிகள் குறித்து, அவை ஒவ்வொன்றும் தனித்தனி அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும்". 1969–70-லிருந்து புதிய நான்காம் திட்டம் செயற்பட வேண்டுமென திட்ட ஆணைக் குழு முடிவு செய்திருப்பதற் கிணங்க, மூன்று ஆண்டுத் திட்டங் களில் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களையும், பணிகளையும் பேணி வருவதற்கு ஆகும் செலவினங்களை அறுதியிட்டு அறியவும், மத்திய அரசிலிருந்து மாநிலங்களுக்கு நிதி மாற்றம் குறித்துப் புதியதொரு திட்டமொன்றை வகுக்கவும், புதிய நிதி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப் படுமென்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சிறிய கேள்விககு இடைக்கால அறிக்கையொன்றையனுப்பும் படி புதிய நிதி ஆணைக்குழு வினை வேண்டுவது பொருத்தமென்றாலும், அத்துடன்கூட அதன் ஆய்வு வரம்புகளை விரிவுபடுத்தி, அரசியலமைப்பில் நிதி பற்றிய விதித் துறை களை ஆழ்ந்து ஆய்வு செய்யும்படி வேண்டுவதும் அவசியமென்று நாங்கள் கருதுகிறோம். நிதி ஆணைக் குழு, மத்திய வரவு, செலவினங்களின் வளர்ச்சிப் போக்கினை ஆய்வு செய்து, வளர்ச்சியின் பாற்படாத மத்திய அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற வழிகளைக் குறித்துக் கோடிட்டுக் காட்டவேண்டுமென்பது எங்கள் கருத்து. அவ்வாறான ஒரு

28th February 1968] [திரு. சி. என். அண்ணாதுரை]

இணைந்த முறையில், மத்திய, மாநில நிதி வசதிகளைக் குறித்து ஆய்வு செய்ய முற்படுவதன் வாயிலாகவே, நாட்டின் நிதி வசதிகளை, நாட்டு நலனுக்குச் சிறந்த வகையில் பயன்படுத்த இயலுமென்பதை நாம் உறுதிப்படுத்த முடியும்.

8. சட்டப் பேரவையில் இன்று காலையில் நான் நிகழ்த்திய உரையில் கூறியிருப்பதைப்போல, நமது அரசியலமைப்பின் கீழ் உள்ள நிதி வசதிகளையும், அதிகாரங்களையும் பகிர்ந்தளிப்பது குறித்து மீண்டும் ஆராய வேண்டும் என்று, ஈண்டு நாம் விடுக்கும் வேண்டுகோள், எவ்வகையிலும் மத்திய அரசின் வலியமையைக் குறைக்குமென்றோ, நாட்டின் ஒற்றுமையைக் குலைக்குமென்றோ தவறாகப் பொருள்கொள்ளக் கூடாது. நாட்டின் ஒற்றிறுமையென்பது, மக்களின் கருத்திலும் உள்ளத்திலும் இடம் பெற்றுத் திகழ்வதோர் சீரிய உணர்ச்சியாகும். மக்களின் சிந்தையிலே நாம் ஏற்றி வைக்கும் நிறைவு உணர்ச்சிக்கேற்ப, அவர்களும் பொறுப்புணர்ச்சியுடனும் கடமை உணர்ச்சியுடனும், இம் மாபெருங் குடியாட்சியிலே தங்களுக்குரிய பங்கினை செம்மையுற ஆற்றுவார்களென்பதிலே தினையளவும் ஐயமில்லை. மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களுடைய இன்னல்களை நன்குணரும் மாநிலங்கள் தான், மத்திய அரசைவிட அவர்களுடைய நல்வாழ்வின் தேவைகளை நிறைவேற்றி, அவர்கள் மனதில் நிறைவுணர்ச்சியைத் தோற்றுவிப்பதற்கான ஏற்ற நிலையிலுள்ளனவென்று நாங்கள் கருதுகின்றோம். இந் நிலையிலிருந்து நோக்கும்போது, மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்குமிடையே நிதி வசதிகளை மேலும் நடை முறை அறிவோடு பகிர்ந்தளிப்பதால், மாநிலங்கள், மக்களின் தேவைகளை நிறைவேற்ற வாய்ப்பளிப்பதுடன், பொருளாதார வளர்ச்சியைப் பேணிப் பெருக்கவும் உதவியாயிருக்கும். இத்தகைய பொருளாதார வளர்ச்சியே, இன்று நமது நாட்டில் நிலவி வரும் பற்பல கசப்புணர்ச்சிகளுக்கு அருமருந்தாகவும் அமையும் என்று எண்ணுகிறேன்.

9. இவை கூறி, இவ் வரவு-செலவுத் திட்டத்தை இம்மன்றம் ஏற்க வேண்டுமென வேண்டுகிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. on Friday, the 1st March 1968. 4-00 p.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

109. Notification issued with G.O. Rt. No. 1342, Revenue, dated 27th November 1967 making the exemption in respect of the tax payable under the Madras General Sales Tax Act, 1959 on the sale to the Balavihar, Kilpauk, Madras by Thiru Sundaram Industries, Private Limited, Madurai, of the bus body constructed on Fargo Chassis 165 " W.B. with No. PAB. 62647/T. Engine No. 3379743. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras*) *Act I of* 1959].

110. Notification issued with G.O. Ms. No. 2735, Home, dated 27th September 1967 making amendment to the Madras Motor Vehicles Rules, 1940 [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939.]